THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Government have so far sanctioned a loan of Rs. 42·94 lakhs and a grant of Rs. 18·76 lakhs to the Corporation of Madras for the scheme. Out of this grant and loan, works to the extent of Rs. 46·64 lakhs have been executed up to March 1967.

THIRU K. VINAYAKAM : While I differ from the statement of Dr. Hande that Kodambakkam is considered to be the Cindrella of Madras whereas it is considered to be the Hollywood of Madras the Corporation spend money, lay a road and black-top it, the next day another department of the same Corporation breaks up the road for some other purpose and relays it and as this is duplication of work and involves expenditure, will the Government issue instruction to their own party in power in the Corporation to have co-ordination in their work?

THE HON. THIRU C. N. ANNADURAI : That has been the proposal put forward by the Corporation for the past so many years. The Government at that time was not considerate or was unsympathetic. This Government proposes to act in a different manner.

**மேலவையில் ஆசிரியர் பிரதிநிதி**

* 346 வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மேலவையில் ஆசிரியர் தொகுதிக்குப் பிரதிநிதியை தேர்ந்தெடுக்க தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிக்கும் வகையில் மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**போலீஸ் இன்ஸ்பெக்டர்கள்.**

* 347 வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்டகேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றனர் ?

(இ) இவர்கள் எல்லோருக்கும் இலவச வீடோ அல்லது வீட்டு வாடகைக்கு அலவன்ஸோ கொடுக்கப்படுகிறதா ?

(உ) இல்லையென்றால் அது கொடுக்கப்பட சர்க்கார் உத்திரவிடுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) 361.

(இ) & (உ) 144 போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு அரசினர் உறைவிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 217 இன்ஸ்பெக்டர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** ஐயா, உறைவிடம் கொடுக்கப்பட்டுள்ளவர்களிடத்தில் கூட வாடகை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதாகத் தெரிகிறது. ஆகவே, அம்மாதிரி வாடகை வசூலிக்கக்கூடாது என்று தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?